முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 111/2021

தேதி : 22–01–2024

(வா.சா.1) – செல்வி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை :

பிரதிவாதி எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்பதால் அவரை எனக்கு தெரியும். பிரதிவாதியை 20 வருடங்களாக எனக்கு தெரியும். எனது கணவர் மில்லில் வேலைக்கு செய்கிறேன். நானும் கொஞ்ச காலம் மில்லில் வேலைக்கு சென்றேன், தற்போது கடந்த 5 ஆண்டுகளாக நான் வேலைக்கு போகவில்லை. நான் சொல்வது போல் என் கணவர் மில் வேலைக்கு போகவில்லை என்றும், அவர் சுக்கமநாயக்கன்பட்டியில் பைனான்ஸ் தொழில் செய்கிறார் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு ரூபாய் நான்கு லட்சம் கொடுத்தேன். பிரதிவாதியின் வீட்டில் வைத்து அந்த தொகை கொடுத்தேன். பத்திர பதிவு அலுவலகத்தில் வைத்து பணம் கொடுக்கவில்லை. சொத்தை கிரையம் செய்வதற்காக பிரதிவாதி அந்த தொகையை என்னிடம் வாங்கினார். சொத்தைப் பற்றிய விபரம் எனக்கு தெரியும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 67 செண்ட் ஆகும். 17.04.2018 தேதி கிரைய ஒப்பந்தம் செய்துகொண்டோம். அப்போது தாவா சொத்தின் சந்தை மதிப்பு ரூபாய் 20 லட்சம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை

கிரையம் செய்து கொள்வதற்காக தாவா கிரைய ஒப்பந்தம் செய்துகொள்ளப்படவில்லை என்றும், பிரதிவாதி என்னிடம் வாங்கிய கடன் தொகை ரூபாய் 3 லட்சத்திற்கு பொறுப்பிற்காக தான் அவர் தாவா கிரைய ஒப்பந்தத்தை எழுதிக்கொடுத்தார் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த தொகை என்னுடைய பணம் அல்ல என்றும், அது என் கணவர் பைனான்ஸ் தொழிலில் என் மூலமாக கொடுத்த பணம் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த தொகைக்கு மாதந்தோறும் 3–1/2 வட்டி வீதம் பிரதிவாதி எனக்கு செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. இந்த வழக்கினை எந்த தேதியில் தாக்கல் செய்தேன் என்று ஞாபகமில்லை. ஒப்பந்த காலக்கெடுவிற்கு பிறகு சுமார் 1–1/2 ஆண்டுகள் கழித்து தான் இந்த வழக்கினை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். ஆனால் இரண்டு முறை நோட்டீஸ் அனுப்பியுள்ளேன். அது வரை பிரதிவாதி ஒழுங்காக வட்டி கொடுத்து வந்ததால் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும், கொரோனா காலக்கட்டத்தில் பிரதிவாதி வட்டி செலுத்தாததால் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா கிரைய ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு முன்பு தாவா சொத்து சம்பந்தமான ஆவணங்களை பார்வையிட்டேனா என்று ஞாபகமில்லை. அந்த ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றும், என் கணவர் அவற்றை பார்வையிட்டு பைனான்ஸ் வழங்கலாம் என்று முடிவு செய்த பிறகு தான் பைனான்ஸ் கொடுத்து அதற்காக தாவா கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக வருவாய் ஆவணங்களில் சில மாறுதல் செய்யவேண்டும் என்று பிரதிவாதி கால அவகாசம் கோரியதாக சொல்வது தவறு என்றும், தாவா சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்கள் சரியாக தான் இருந்தது என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எழுத்துப்பூர்வமாக

கால அவகாசம் எதுவும் கேட்கவில்லை.

மறு விசாரணை: இல்லை.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2024.01.23 11:02:22 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.